மஹாபெரியவா அடியார்கள் குழுமியிருக்க, ஆனந்த பெருக்குடன் "அங்கோலம் நிஜ பீ$_3$ஜ ஸந்ததி: " என்று தொடங்கும் ஸ்லோகத்தை அவர்கள் தமக்கே உரித்தான ஏற்ற இறக்கம் நடு நடுவே மௌனம், என்ற தனித்த சைலியால் விளக்கி வருகிறார்கள். நடுவே ஒருவர் எழுந்து " திருவண்ணாமலையில் பகவான் ரமணர் ஶிவானந்தலஹரியில் பத்து ஸ்லோகங்களைப் பொறுக்கி எடுத்து அதை தினமும் சொல்லும்படி உபதேசித்துள்ளார்கள். அதில் முதல் ஸ்லோகம் இது. ஸ்லோக வரிசை முன்னும், பின்னும் மாறியிருக்கும். அப்படிச் சொல்லலாமா? அல்லது புஸ்தகத்திலுள்ள வரிசையில் சொல்வது நல்லதா? என்று கேட்டார்.

மஹான்கள் நல்லதெனக் கண்டுணர்ந்ததைத் தான் உபதேசிப்பார்கள். அதனால் எது நல்லதென்று சிந்திப்பது உசிதமல்ல. அவர்கள் உபதேசித்த வழியும் பெரியோர்கள் ஏற்றது. அந்த வரிசை பற்றிய குறிப்பு அடங்கிய ஸ்லோகம் உண்டே! என்று சிந்தித்து உடன் அந்த ஸ்லோகத்தைச் சொன்னார்கள்

**அம் - ப$_4$க் - ஜன - க$_4$டோ - வக்ஷ: கு$_3$ஹா - நர - க$_3$பீ$_4$ - வடு: I**
**ஆத்$_3$யா - த$_3$ஶ ஶிவானந்த$_3$லஹரீ ஶ்லோகஸூசிகா II**

1. **அங்கோலம் நிஜ பீ$_3$ஜ ஸந்ததிரயஸ்காந்தோபலம் ஸூசிகா**

**ஸாத்$_4$வீ நைஜ விபு$_4$ம் லதா க்ஷிதி-ருஹம் ஸிந்து$_4$ஸ்ஸரித்$_3$ வல்லப$_4$ம் |**
**ப்ராப்னோதீஹ யதா$_2$ ததா$_2$ பஶு-பதே: பாதா$_3$ரவிந்த$_3$-த்$_3$வயம்**
**சேதோ-வ்ர்த்திருபேத்ய திஷ்ட$_2$தி ஸதா$_3$ ஸா ப$_4$க்திரித்யுச்யதே ||61||**

அங்கோலம் (ஏறழிஞ்சல்) எனப் பெயர் பெற்ற மரத்தை அதனுடைய விதை வரிசைகளும், இரும்புக்காந்தக்கல்லை ஊசியும், தன்னுடைய கணவனை பதிவ்ரதையான பெண்ணும், மரத்தை கொடியும், கடலை நதியும் எவ்விதம் இந்த உலகில் அடைகிறதோ அவ்விதம் மனதின் நாட்டமும் பசுபதியின் பாதத்தாமரைகள் இரண்டையும் அடைந்து, எப்பொழுதும் சஞ்சலமில்லாமல் நிலைபெற்றிருந்தால், அதுவே பக்தி எனப்படும்

**2. ப$_4$க்திர்மஹேஶ பத$_3$-புஷ்கரமாவஸந்தீ**

காத$_3$ம்பி$_3$னீவ குருதே பரிதோஷ-வர்ஷம் |
ஸம்பூரிதோ ப$_4$வதி யஸ்ய மனஸ்தடாக:-
தஜ்ஜன்ம-ஸஸ்யமகி$_2$லம் ஸப$_2$லம் ச நான்யத் ||76||

பக்தியானது மஹேஶ்வரனின் பாதம் என்கிற ஆகாசத்தில் இருந்துக்கொண்டு மேகங்களின் கூட்டத் தைப் போல் ஆனந்தமழை பொழிகிறது. எவனுடைய மனம் என்கிற குளம் அதனால் நிரப்பப்படுகிறதோ, அவனுடைய ஜன்மம் என்கிற பயிர் முழுப் பயனை அடைகிறது. மற்ற எதுவும் அடைவதில்லை

3. ஜனன - ம்ர்தி - யுதானாம் ஸேவயா தே$_3$வதானாம்
ந ப$_4$வதி ஸுக$_2$ லேஶஸ்ஸம்ஶயோ நாஸ்தி தத்ர |
அஜனிமம்ர்த ரூபம் ஸாம்ப$_3$மீஶம் ப$_4$ஜந்தே
ய இஹ பரம ஸௌக்$_2$யம் தே ஹி த$_4$ன்யா லப$_4$ந்தே ||83||

ஜனனம், மரணம் இவைகளுக்கு உட்பட்ட தேவதைகளை பூஜிப்பதால் சிறிதளவு சுகமும் ஏற்படாது. அதில் சந்தேகம் கிடையாது . எவர்கள் பிறப்பு அற்றவனும், அம்பிகையுடன் கூடியவனும் ஆகிய ஈசனை இந்த ஜன்மத்தில் பூஜிக்கிறார்களோ அவர்களே பிறவிப்பயனை எய்தியவர்களாகி பரமசுகமான மோக்ஷத்தை அடைகிறார்கள்

4. க$_4$டோ வா ம்ர்த்பிண்ட$_3$: அபி அணுரபி ச தூ$_4$மோऽக்$_3$னிரசல:
படோ வா தந்துர்வா பரிஹரதி கிம் கோ$_4$ர - ஶமனம் |
வ்ர்தா$_2$ கண்ட$_2$ - க்ஷேபா$_4$ம் வஹஸி தரஸா தர்க - வசஸா
பதா$_3$ம்போ$_4$ஜம் ஶம்போ$_4$ர்ப$_4$ஜ பரம - ஸௌக்$_2$யம் வ்ரஜ ஸுதீ$_4$ ||6||

ஹே நிர்மலமான புத்தியுடையவனே! குடமோ, மண் உருண்டையோ, பரமாணுவோ, புகையோ அல்லது மலையின் மேல் நெருப்போ, வஸ்திரங்களோ அல்லது நூல்களோ பயங்கரமான யமபாதையை தடுப்பதற்கு சாமர்த்தியமுள்ளதாகுமா என்ன? தர்க்கத்தினால் வீணாக

தொண்டையில் வலிதான் ஏற்படும். ஶம்புவினுடைய சரணாரவிந்தத்தை வழிபடு. சீக்கிரமாக பரமானந்த நிலையான மோக்ஷத்தை அடை

**5. வக்ஷஸ்தாட$_3$ன ஶங்கயா விசலிதோ வைவஸ்வதோ நிர்ஜரா:**
**கோடீரோஜ்ஜ்வல ரத்ன - தீ$_3$ப - கலிகா நீராஜனம் குர்வதே |**
**த்$_3$ர்ஷ்ட்வா முக்தி - வதூ$_4$ஸ்தனோதி  நிப்$_4$ர்தாஶ்லேஷம் ப$_4$வானீ - பதே**
**யச்சேதஸ்தவ பாத$_3$ - பத்$_3$ம - ப$_4$ஜனம் தஸ்யேஹ கிம் து$_3$ர்லப$_4$ம் ||65||**

ஹே பவானிபதே! எவனுடைய மனம் உன்னுடைய பாதத்தாமரைகளை பஜித்துக்கொண்டு இருக்கிறதோ அவனுக்கு இங்கு அடைய முடியாதது என்ன இருக்கிறது? அந்த பக்தனை பார்த்தவுடன் யமன் மார்பில் உதை விழுமோ என்று அஞ்சி ஓடிப்போய் விடுகிறான், தேவர்கள் தங்கள் கிரீடத்தில் பிரகாசிக்கின்ற மொட்டு போன்ற ரத்தின தீபங்களால் தீபாராதனையை செய்கிறார்கள், முக்தி என்கிற பெண் ஆழத் தழுவிக் கொள்கிறாள்

**6. கு$_3$ஹாயாம் கே$_3$ஹே வா ப$_3$ஹிரபி வனே வாऽத்$_3$ரி - ஶிக$_2$ரே**
**ஜலே வா வஹ்னௌ வா வஸது வஸதே: கிம் வத$_3$ ப$_2$லம் |**
**ஸதா$_3$ யஸ்யைவாந்த: கரணமபி ஶம்போ$_4$ தவ பதே$_3$**
**ஸ்தி$_2$தம் சேத்$_3$ யோகோ$_3$ऽஸௌ ஸ ச பரம - யோகீ$_3$ ஸ ச ஸுகீ$_2$ ||12||**

ஒருவன் குகையிலோ, வீட்டிலோ, வெளியிலோ, காட்டிலோ, மலையின் சிகரத்திலோ, ஜலத்திலோ நெருப்பிலோ வசிக்கட்டுமே. அவ்விதம் பல ஸ்தலங்களில் வசிப்பதால் என்ன பிரயோஜனம்? ஹே ஶம்போ! நீயே சொல். எவனுடைய மனதும் (மற்ற இந்த்ரியங்களுடன்) கூட எப்பொழுதும் உன்னுடைய பாதாரவிந்தத்திலேயே நிலைத்து இருக்குமேயானால் அது தான் யோகம், அவன் தான் பரமயோகீ, மற்றும் அவன்தான் சுகத்தையுடையவன்.

7. நரத்வம் தே$_3$வத்வம் நக$_3$ - வன - ம்ர்க$_3$த்வம் மஶகதா
பஶுத்வம் கீடத்வம் ப$_4$வது விஹக$_3$த்வாதி$_3$ - ஜனனம் |
ஸதா$_3$ த்வத்பாதா$_3$ப்$_3$ஜ - ஸ்மரண - பரமானந்த$_3$ - லஹரீ
விஹாராஸக்தம் சேத்$_3$ ஹ்ர்த$_3$யமிஹ கிம் தேன வபுஷா ||10||

மனிதனாகவோ, தேவனாகவோ, மலை, காடுகளில் மிருகமாகவோ, கொசுவாகவோ, பசுவாகவோ, புழுவாகவோ, பறவையாகவோ, பிறப்பு ஏற்படட்டுமே. இந்த பூமியில் கிடைத்த எந்த ஜன்மாவிலும் என் மனம் இடைவிடாது உன்னுடைய தாமரை புஷ்பங்கள் போலுள்ள பாதங்களை த்யானம் செய்வதினால் உண்டாகும் ஆனந்த பிரவாகத்தில் விளையாடுவதில் ஆவலுள்ளதாக இருக்கும் பக்ஷத்தில் எந்த ஶரீரமாக இருந்தால் என்ன?

8. க$_3$பீ$_4$ரே காஸாரே விஶதி விஜனே கோ$_4$ர - விபினே
விஶாலே ஶைலே ச ப்$_4$ரமதி குஸுமார்த$_2$ம் ஜட$_3$ - மதி: |
ஸமர்ப்யைகம் சேதஸ்ஸரஸிஜம் உமா - நாத$_2$ ப$_4$வதே
ஸுகே$_2$னாவஸ்தா$_2$தும் ஜன இஹ ந ஜானாதி கிமஹோ || 9 ||

ஹே உமாபதியே! விவேகமில்லாத ஜனங்கள் புஷ்பங்களுக்காக ஆழமான தடாகத்திலும், ஜன நடமாட்டமில்லாத பயங்கரமான காட்டிலும், பரந்த மலையிலும் புகுந்து அலைகிறார்கள். தனது மனதாகிய ஒரு தாமரை புஷ்பத்தை உனக்கு ஸமர்ப்பணம் செய்துவிட்டு இருக்கும் இடத் திலேயே ஆனந்தமாக இருப் பதற்கு ஏன் ஜனங்களுக்கு தோன்றுவதில்லை? அந்தோ!

9. வடுர்வா கே$_3$ஹீ வா யதிரபி ஜடீ வா ததி$_3$தரோ
நரோ வா ய: கஶ்சித்$_3$ - ப$_4$வது ப$_4$வ கிம் தேன ப$_4$வதி |
யதீ$_3$யம் ஹ்ர்த்பத்$_3$மம் யதி$_3$ ப$_4$வத$_3$தீ$_4$னம் பஶு-பதே
ததீ$_3$யஸ்த்வம் ஶம்போ$_4$ ப$_4$வஸி ப$_4$வ பா$_4$ரம் ச வஹஸி ||11||

ஹே பவ! ப்ரம்மச்சாரியாலும், க்ரஹஸ்தஸ்தானாலும், ஸன்யாஸியாலும், ஜடை வைத்த வானப்ரஸ்தனானாலும், வேறு யாராகவும் இருக்கட்டுமே, அதனால் என்ன ஆயிற்று? ஹே பஶுபதே! எவனுடைய ஹ்ருதயதாமரை உனக்கு வயப்படுகிறதோ, ஹே ஶம்போ! நீ அவனுக்கு வசமாக் ஆகிவிடுகிறாய். அவனுடைய பிறவிச் சுமையும் தாங்குகிறாய்

**10. ஆத்$_3$யாऽவித்$_3$யா ஹ்ர்த்$_3$க$_3$தா நிர்க$_3$தாஸீத்-**
**வித்$_3$யா ஹ்ர்த்$_3$யா ஹ்ர்த்$_3$க$_3$தா த்வத்ப்ரஸாதா$_3$த் |**
**ஸேவே நித்யம் ஶ்ரீ - கரம் த்வத்பதா$_3$ப்$_3$ஜம்**
**பா$_4$வே முக்தேர்பா$_4$ஜனம் ராஜ - மௌலே ||91|**

சிரசில் சந்திரகலையுடன் பிரகாசிப்பவனே! உன் அருளால் அனாதி காலமாய் இதயத்திலிருந்த அஞ்ஞானம் அகன்றது. சிக்கலை அவிழ்க்கும் (ஆனந்தத்தை கொடுக்கும்) ஞானம் இதயத்தில் தோன்றிவிட்டது. ஐஶ்வர்யத்தை அளிப்பதும் மோக்ஷத்திற்கு இருப்பிடமானதுமான உன்னுடைய பாதத்தாமரைகளை தினந்தோறும் சேவித்து த்யானம் செய்கிறேன்

**ஶ்ரீ மஹா பெரியவா ஶரணம்**
**ஹர ஹர ஶங்கர ஜய ஜய ஶங்கர**